[1979 மார்ச் 12

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, முக்கியமான கேள்வியாக............(குறுக்கீடு) நீங்கள் சஞ்சய் காந்தியை ஆதரித்தால் உங்கள் கட்சியே 'குளோஸ்' ஆகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தமாதிரி விவாதத்தை யெல்லாம் வெளியிலே வைத்துக்கொள்ளுங்கள். இது அவை. தயவுசெய்து உட்காருங்கள்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்.

*வினா எண். 359—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழை பாடமொழியாகக் கொண்டு படித்தவர்களில் யாரேனும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக உள்ளனரா—

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒருவருமில்லை.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, தமிழை பாட மொழியாகக் கொண்டுபடித்தவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக யாரும் வரவில்லை என்று சொன்னார்கள். அப்படியானால் தமிழை பாடமொழியாகக் கொண்டு கற்பவர்களுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரி யாவதற்கு அருகதை உண்டா, இல்லையா—

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதுவரை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வந்திருக்கிறவர்கள் எல்லாம் கல்லூரிகளிலே ஆங்கிலத்தை பாடமொழியாக ஏற்று படித்தவர்களாக இருக்கிறார்கள். தமிழை இப்போதுதான் கல்லூரிகளில் பாடமொழியாக ஆக்கியிருக்கிறோம். ஒருவேளை எதிர்காலத்தில் தமிழை பாடமொழியாகக் கொண்டு படித்தவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வரலாம்.

Electricity undertakings taken over by Government.

*Q. No. 338—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the firms dealing in power distribution in the private secctor have been paid due compensation by the State for taking over; and

(*b*) if not, the causes for the delay in payment ?

1979 மார்ச் 12]

மாண்புமிகு திரு. ச, இராமச்சந்திரன் ; (அ) & (ஆ) அரசுடைமையாக்கப்பட்ட ஏழு தனியார் மின் நிறுவனங்களில் இரண்டு மின் நிறுவனங்களுக்கு ஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது, இரண்டு நிறுவனங்களின் ஈட்டுத் தொகை நிர்ணயத்தை நடுவரின் தீர்ப்புக்கு விடுபட்டுள்ளது. மீதமுள்ள மூன்று நிறுவனங்களுக்கு ஈட்டுத் தொகை வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எந்தெந்த ஆண்டுகளில் எந்தெந்த தனியார் மின் நிறுவனங்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன என்பதை அறிவிக்க இயலுமா? அவைகளில் சிலவற்றுக்கு நஷ்டயீட்டுத் தொகை வழங்கப்பட்டிருப்பதாகவும், சில பலவற்றுக்குத் தரப்படவில்லை என்றும் சொன்னார்கள். இதுவரையில் எந்தெந்த நாட்டுடைமையாக்கப்பட்ட மின் நிறுவனங்களுக்கு நஷ்டயீட்டுத்தொகை வழங்கப்பட்டிருக்கிறது ; ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு வழங்கப்பட்டது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, **1973** ஆம் ஆண்டு சட்டத்தின்கீழ் தனியார் மின் நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன. இந்த ஆண்டில் சேலம்—ஈரோடு மின்சார நிறுவனமும், திருநெல்வேலி—தூத்துக்குடி மின்சார நிறுவனமும் நாட்டுடைமையாக்கப்பட்டதற்கு முறையே **95,31,950** ரூபாயும், **84,48,786** ரூபாயும் வழங்கப்பட்டது. கும்பகோணம் மின்சார நிறுவனமும், நாகப்பட்டிணம் மின்சார நிறுவனமும் நாட்டுடைமையாக்கப்பட்டதற்கு ஈட்டுத் தொகையாக முறையே வழங்கப்பட்ட 20 இலட்சம் ரூபாயும் 8 இலட்சம் ரூபாயும் போதாது என்று சொல்லி, தமிழ்நாடு சட்டம் 30, பிரிவு 10 ன்படி கழிவுத்தொகை பெறுவதற்கு நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று கேட்டுள்ளன. இந்த வேண்டுகோளுக்கிணங்க சென்னை நகர உரிமை இயல் நீதிமன்ற துணை நீதிபதி திரு. கே.இ. வரதன் அவர்கள், அவர்களுடைய கோரிக்கையை விசாரிக்க நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவைகள் ஆய்வில் இருக்கின்றன.

திரு. எஸ்.ஆர். இராதா : தலைவரவர்களே, மின்சார நிறுவனங்களை அரசு எடுத்துக்கொண்ட பின்னால் இதுவரை தனி கார்ப்பரேஷனாக வைத்துக்கொண்டு தொழிலாளர்களுக்கும் மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கும் என்னென்ன நடைமுறைகள் கையாளப்பட்டனவோ அவைகள்தான் இப்போதும் இருக்கின்றன. வழக்கு நடுவர் தீர்ப்பில் இருந்தாலும் அரசு உடனடியாக மின்சார வாரியத்தோடு இணைத்து, மின்சார வாரியத்தினால் வழங்கப்படுகின்ற எல்லாச் சலுகைகளையும் அளிக்க முன்வருமா? அதற்கான வழிவகைகள் செய்யப்படுமா?

[1979 மார்ச் 12

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர்வர் களே, அரசு வழிவகுக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, திருநெல்வேலி—தூத்துக்குடி மின்சார கார்ப்பரேஷனை அரசு ஏற்றுள்ளது. அரசு ஏற்றுக்கொண்ட பின்னாலும் மற்ற மின்சாரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. அவர்களுக்கும் சலுகைகளை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதுபற்றி அரசு ஆராயும்.

[முற்பகல் 9–10]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தனியாரிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு நாட்டுடைமையாக்கப்பட்ட மின் வாரியங்கள், முன்பு அவை லாபத்தில் நடைபெற்றதைப் போல இப்போதும் லாபத்திலே நடைபெறுகிறதா அல்லது நஷ்டத்திலே நடைபெற்று வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதற்கான விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் இதைப்போன்ற தனியார் மின் நிறுவனங்கள் எவ்வளவு இயங்கி வருகின்றன? அவற்றையும் வாரியம் எடுத்துக்கொள்வதற்கு ஏதாவது உத்தேசம் அரசினிடத்தில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனியார் மின் நிறுவனங்கள் முழுவதும் வாரியத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன. ஒருசில நகராட்சி மன்றங்கள் மட்டும்தான் மின் நிறுவனங்களை தங்களது நிர்வாகத்தின் கீழ் இயக்கி வருகின்றன.

பொறியியல் பட்ட மேற்படிப்பு தகுதி பெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு

*வினா எண். 339ஊ திரு. க. சுப்பு : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் பட்ட மேற்படிப்பு தகுதி பெற்றவர்களுக்கு மற்ற துறைகளில் வழங்கப்பட்டிருப்பதுபோல் சிறப்பு ஊதிய உயர்வுகள் (Advance increments) மின்வாரியத்தில்